**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3636

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.10.2020

Accepted: 05.12.2020

Published: 01.01.2021

Citation:
Murugesapandian, N. "Quests and Tortures of A Storyteller in the Fictional World: A Critical Study of Saravanan Chandran's Novels." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 3, 2021, pp. 1–12.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3636

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Quests and Tortures of A Storyteller in the Fictional World: A Critical Study of Saravanan Chandran's Novels

**N. Murugesapandian**

http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract** - In modern life, many people have lost sight of the facts and are unaware of it.The copy in the middle of the copy is genuine, with more originality than the original.This is the era of copies. There is no possibility of anyone being the original self orientedman. When history is constructed by power, human beings are transformed into mere bodies.Modern storytelling in Tamil has taken on a new dimension. Moving away from traditional storytelling, stories that are contrary to the norms that have been constructed so far have gained prominence.Novels like The Story of Five Crocodiles (2015), Rolex Watch (2016), Ajwa (2016), Barbie (2017), Subitsa Murugan (2018), Lakudu (2019) written by Saravanan Chandran highlight the problems and pitfalls faced by the younger generation. They have, in a sense, expanded into inquiries into current society; They are full of stories depicting the lives of contemporary Tamil youth. Saravanan's novels are full of likes and dislikes. The same person emerges with different identities in all the novels. The world of young people who seek to identify themselves as rebellious and adventurous in their individuality, the question arises as to why there are new stories being created over and over again. Saravanan Chandran's novels are unique in that they highlight the human existence oscillating between various rules and political crises.

**Key Words:** Tamil Novel, Criticism, Saravanan Chandran, Globalization, Consumer Culture, Marketization, Psychology Problem, ainthu Muthalaikalinkathai, Rolex Watch, Ajwa, Barbie, Subitsa Murugan, Lagudu.

**References**

1. Saravanan Chandran. (2015). *Ainthu Muthalaikalin Kathai*, Chennai, Uyirmaai Publication.
2. Saravanan Chandran. (2016). *Rolex watch*. Chennai, Uyirmaai Publication.
3. Saravanan Chandran. (2016). *Ajwa*. Chennai: Uyirmaai Publication.
4. Saravanan Chandran. (2017). *Barbie*. Chennai: Kilakku Publication.
5. Saravanan Chandran. (2018). *SubitchaMurugan*. Chennai: Discovery Book Palace.
6. Saravanan Chandran. (2019). *Lakudu*. Chennai: KilakkuPublication.
7. Umberto Ego. (2018). *How do I write*. K. Panchangam (Tr.). Pollachi, Na. Mahalingam Translation Center.

# புனைவுலகில் விரிந்திடும் கதைசொல்லியின் தேடல்களும் வதைகளும்: சரவணன் சந்திரனின் நாவல்களை முன்வைத்து

ந.முருகேசபாண்டியன்

**ஆய்வுச் சுருக்கம்:** நவீன வாழ்க்கையில் உண்மைகளைத் தொலைத்துவிட்டு, அது குறித்து அறியாமல் வாழ்கிறநிலை, பலருக்கும் பிடித்துள்ளது. நகல்களின் நடுவில் நகல் உண்மையானது, அசலான உண் மையைவிட அசல்தன்மையுடன் இருக்கிறது. இது நகல்களின் காலம். அசலான சுயமான மனிதன் என்று யாரும் இருப்பதற்கான சாத்தியம் எதுவுமில்லை. வரலாறு என்பது அதிகாரத்தினால் கட்டமைக்கப்படுகிற சூழலில் மனிதர்கள் வெறும் உடல்களாக மாற்றப்படுகின்றனர். தமிழில் நவீனக் கதையாடல்கள், புதிய பரிமாணம் பெற்றுள்ளன. மரபான கதைசொல்லலில் இருந்துவிலகி, இதுவரை கட்டமைக்கப்பட்டுள்ள நெறிகளுக்கு மாறான கதைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சரவணன் சந்திரன் எழுதியுள்ள ஐந்து முதலைகளின் கதை (2015), ரோலக்ஸ்வாட்ச் (2016), அஜ்வா (2016), பார்பி (2017), சுபிட்சமுருகன் (2018), லகுடு (2019) போன்ற நாவல்கள் இளையதலைமுறையினர் எதிர்கொண்டிருக்கிற பிரச்சினைகளையும், சிடுக்கு களையும் முன்னிலைப்படுத்துகின்றன. அவை, ஒருவகையில் நடப்புச் சமூகம் குறித்த விசாரணைகளாக விரிந்துள்ளன; சமகாலத் தமிழக இளைஞர்களின் வாழ்க்கைப் போக்குகளைச் சித்திரிக்கிற கதைகளால் நிரம்பியுள்ளன. சரவணனின் நாவல்களில் தன்னிலையின் விருப்புவெறுப்புகள் குவிந்திருக்கின்றன. ஒரே ஆள் தான் எல்லா நாவல்களிலும் வெவ்வேறு அடையாளங்களுடன் வெளிப்படுகிறார். தனிமனித ரீதியில் கலகம், சாகசம் எனத்தன்னிருப்பை அடையாளப்படுத்திட விழைகிற இளைஞர்களின் உலகம், மீண்டும் மீண்டும் உருவாக்குகிற புதிய கதைகள், ஏன் இப்படியெல்லாம் இருக்கின்றன என்ற கேள்வி தோன்றுகிறது. பல்வேறு விதிகளுக்கும், அரசியல் நெருக்கடிகளுக்கும் இடையில் அந்தரத்தில் ஊசலாடுகிற மனித இருப்பைக் கதையாடலில் முன்னிலைப்படுத்ததியுள்ள சரவணன் சந்திரனின் நாவல்கள் தனித்துவமானவை.

**முக்கியச் சொற்கள்:** தமிழ் நாவல், திறனாய்வு, சரவணன் சந்திரன், உலகமயமாக்கல், நுகர்பொருள் பண்பாடு, சந்தைமயமாதல், மனப்பிறழ்வு. ஐந்து முதலைகளின் கதை, ரோலக்ஸ்வாட்ச், அஜ்வா, பார்பி, சுபிட்சமுருகன், லகுடு.

நம்முடைய பூமி நமக்குப் போதாத அளவுக்குச் சிறியதாகிக் கொண்டிருக்கிறது. நம்முடைய வளங்கள் அபாயகரமான வேகத்தில் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பருவநிலை மாற்றம் எனும் பேரழிவான வெகுமதியை நாம் நம் பூமிக்கு அளித்துள்ளோம். நாளுக்குநாள் உயரந்துவரும் வெப்பநிலை, தொடர்ந்து சுருங்கிக்கொண்டிருக்கும் துருவப்பனியின் அளவு. மிகப்பெரிய அளவில் காடுகள் காலியாக்கப்பட்டுக் கொண்டிருத்தல், அளவுக்கு மீறிய மக்கட் தொகை, நோய், போர், பட்டினி, நன்னீர் கிடைக்காமை, வேகமாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விலங்கினங்கள் போன்ற அனைத்தும் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளாக இருந்தும் இதுவரை தீர்க்கப்படவில்லை இன்றைய காலகட்டத்திலும் மனிதகுலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ள மற்றொரு விஷயம் அணு ஆயுதப் போர் --ஸ்டீபன் ஹாக்கிங்

எழுபதுகள் காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து புதுதில்லிக்குப் புலம்பெயர்ந்த ஆதவன் எழுதிய என் பெயர் ராமசேஷன், காகித மலர்கள், இந்திரா பார்த்தசாரதியின்

தந்திர பூமி போன்ற நாவல்கள் பொதுச் சமூகத்தில் இருந்து அந்நியப்பட்ட கதைகளை புதிய மொழியில் கட்டமைத்திருந்தன. அவை, ஒருவகையில் அன்றைய தமிழர் வாழ்க்கையில் இதுவரை உருவாக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கியதுடன், மாறிவரும் சமூக இருப்பின் அபத்தத்தைப் பதிவாக்கியிருந்தன. வளமான தஞ்சை மண்ணில் பார்ப்பனர் மிராசுதாரராகச் சௌகரியமாக வாழ்ந்த சூழலைவிட்டுப் புதுதில்லிக்குப் போக நேர்ந்த திராவிட அரசியல் தந்த நெருக்கடி ஒருபுறம், வேற்று மொழி பேசும் நிலத்தில் அந்நியமாதல் இன்னொருபுறம் என்ற நிலை, கதையாடலில் செல்வாக்குச் செலுத்தின. அந்தப் போக்கின் தொடர்ச்சி, தமிழ் நாவல் ஆக்கத்தில் இன்றளவும் தொடர்கிறது. இன்னொருபுறம் தமிழில் நவீனக் கதையாடல்கள், வேறு புதிய பரிமாணம் பெற்றுள்ளன. மரபான கதைசொல்லலில் இருந்து விலகி, இதுவரை கட்டமைக்கப்பட்டுள்ள நெறிகளுக்கு மாறான கதைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அண்மைக்காலத்தில் சரவணன் சந்திரன் எழுதியுள்ள ஐந்து முதலைகளின் கதை (2015), ரோலக்ஸ் வாட்ச் (2016), அஜ்வா (2016), பார்பி (2017), சுபிட்ச முருகன் (2018), லகுடு (2019) போன்ற நாவல்கள் இளைய தலைமுறையினர் எதிர்கொண்டிருக்கிற பிரச்சினைகளையும், சிடுக்குகளையும் முன்னிலைப்படுத்துகின்றன. அவை, ஒருவகையில் நடப்புச் சமூகம் குறித்த விசாரணைகளாக விரிந்துள்ளன; சமகாலத் தமிழக இளைஞர்களின் வாழ்க்கைப் போக்குகளைச் சித்திரிக்கிற கதைகளால் நிரம்பியுள்ளன. சரவணன், 2015இல் ஐந்து முதலைகளின் கதை என்ற தனது முதல் நாவலில் தொடங்கி, நான்கு ஆண்டுகளில் மொத்தம் ஆறு நாவல்களைக் காத்திரமாக எழுதியிருப்பது, அவருக்குள் கனன்று கொண்டிருக்கிற படைப்பூக்கத்தின் வெளிப்பாடு.

உலகமயமாக்கல் காலகட்டத்தில் எல்லாம் சந்தைக்கானதாக மாற்றப்பட்ட சூழலில் நுகர்பொருள் பண்பாட்டுக்குள் சிக்கியுள்ள இளம் தலைமுறையினர் எதிர்கொள்கிற பிரச்சினைகள் அளவற்றவை. அறிவு என்பது கற்றல், கற்பித்தல் என்பதிலிருந்து மாறி, சரக்காக மாற்றப்பட்டுள்ளது. எல்லாம் சந்தைக்கான உற்பத்தியில், நுகர்பொருள் பண்பாட்டில் அறிவுகூட சரக்காக மாறியுள்ளது. தகவல்களை உற்பத்தி செய்தலும், சந்தைப்படுத்துதலும் தான் அறிவு குறித்த பிம்பங்களைப் பொதுப்புத்தியில் கட்டமைக்கின்றன. இரண்டாயிரமாண்டுகளாக மதம், தத்துவம், பொருளாதாரம், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்து உருவாக்கப்பட்டுள்ள நெறிகளும், அறங்களும் அர்த்தமிழக்கிற கார்ப்பரேட்டு களின் ஆதிக்கத்தில், இளைஞர்கள் கையில் கடன் அட்டைகளுடனும், ஒருபோதும் தீராத கடன்களுடனும் வாழ வேண்டிய நெருக்கடி இன்று ஏற்பட்டுள்ளது. பொன்னுலகு குறித்து உத்திரவாதம் அளித்த அரசியல் சிந்தனையாளர்கள் காணாமல் போய்விட்டனர். அவ்வுலகில் இருக்கிற 'சொர்க்கம்' என்ற மாபெரும் புனைவைக் கட்டமைத்த மதவாதிகள் ஒட்டாண்டியாகி விட்டனர். இன்று கொரோனோ வைரஸ் என்ற நுண் கிருமி, ஆயிரமாண்டுகளாகச் சமூகம், மதம், சாதி உருவாக்கியிருந்த எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. சிலுவையில் இரும்பு ஆணிகளால் அறையப்பட்டபோது, ஏலி ஏலி ஏலி லாமா ஜபக்தனி (என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்) என்று எபிரேய மொழியில் யேசுநாதர் கதறிய கதறல், வெளியெங்கும் மிதக்கிறது. நவீன வாழ்க்கையில் மனிதர்களின் ஆதிக்கச் செயல்பாடுகள் காரணமாக இருத்தல் எப்படியெல்லாம் தத்தளிக்கிறது என்ற தேடல்தான்சரவணன்சந்திரன்நாவல்களின் ஆதாரமா? சரி, போகட்டும். ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றன? பூமியில் வாழ்கிற உயிரினங்களில் மனிதர்கள் ஏன் இப்படி அற்பத்தனமாகவும், சொந்தக்

காசில் சூன்யம் வைக்கிறவர்களாகவும் மாற்றியுள்ளனர்? போன்ற கேள்விகளின் வழியாகச் சரவணனின் படைப்புலகு, விரிந்துள்ளது.

சரவணன் அச்சு ஊடகத்திலும், காட்சி ஊடகத்திலும் தொடர்ந்து தீவிரமாக இயங்குகிறவர். அதிலும் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் பரபரப்பாக ஒளிபரப்பான 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சியின் இயக்குநர் என்ற முறையில் அவருடைய அனுபவங்கள், எந்தவொரு படைப்பாளருக்கும் கிடைத் திராதவை. ஆயிரத்திற்குக் கூடுதலான எபிசோடுகளை இயக்கிய சரவணனின் அனுபவங்கள் கட்டுரைகளாகவும், கதைகளாகவும் பதிவாகியுள்ளன. காட்சி ஊடகத்தின் டாக் ஷோவில் மனிதர்கள் ஏன் இப்படி தங்களை நிர்வாணப்படுத்திக்கொண்டு இன்னும் சிக்கலுக்குள்ளாகின்றனர் என்ற கேள்வி என்க்கு எப்பொழுதும் தோன்றும். அவை, ஒருவகையில் தொலைக்காட்சியின் டி. ஆர்.பி. ரேட்டிங்கை ஏற்றுவதற்காக செய்யப்படுகிற தந்திரம் என்பதை மீறி, காமிராவின் மூலம் எவ்விதமான கூச்சநாச்சமும் இல்லாமல் பேசுகிற ஆண்களையும், பெண்களையும் நேரில் சந்தித்துக் கதைகளைக் கேட்ட சரவணனின் அகம் எப்படி இயல்பாகச் சமநிலையுடன் இருக்கும்? யோசிக்க வேண்டியுள்ளது. ஊடகங்களுக்கான கதைகளின் வழியாகத் தன்னை அடையாளப்படுத்திட முயலும் படைப்பு மனம், முடிவிலியான கதைகளில் உலகில் உறைந்திட சந்திரனை இட்டுச் சென்று விட்டது. ரத்தமும் சதையும் ஆன வாழ்க்கை என்பதற்கு அப்பால் உலகமே கதைகள் ஆனது என்ற அவதானிப்பு, சந்திரனைத் தேர்ந்த கதைசொல்லியாக்கியுள்ளது. அவருடைய நாவல்களில் தன்னிலையின் விருப்பு வெறுப்புகள் குவிந்திருக்கின்றன. ஒரே ஆள் தான் எல்லா நாவல்களிலும் வெவ்வேறு அடையாளங்களுடன் வெளிப்படுகிறார். அவர், சரவணனாக நாவல் வாசிப்பில் தோன்றிட வாய்ப்புண்டு. அவர், தன்னிருப்பைப் பற்றி, வாக்குமூலம் போல இடைவிடாமல் கதைக்கிறார். கதைசொல்லி தனது அனுபவங்களைச் சொல்லும்போது, எதிராளி தன்னைப் பற்றி என்ன நினைப்பார் என்ற ஓர்மை எதுவும் இல்லை. எதிரே காமிரா இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற நினைவு இல்லாமல் பேசி, அழுது, சிரித்து, திட்டி, பிறரைத் தாக்குகிற 'சொல்வதெல்லாம் உண்மை' ஆட்கள் போலவே சரவணன் சித்திரிக்கிற கதைசொல்லிகளும் இருக்கின்றனர். தனிமனிதரீதியில் கலகம், சாகசம் எனத் தன்னிருப்பை அடையாளப்படுத்திட விழைகிற இளைஞர்களின் உலகம், மீண்டும்மீண்டும் உருவாக்குகிற புதிய கதைகள், ஏன் இப்படியெல்லாம் இருக்கின்றன என்ற கேள்வி தோன்றுகிறது. நாவலின் கதைசொல்லிகள் யதார்த்த வாழ்க்கையின் நெளிவுசுளிவுகளுடன் இணங்கிப் போகின்றனர். எல்லாவிதமான அத்துமீறல்களையும் இயல்பாகக் கடந்து போகிற சூழலில் வாழ்கிறபோது, சேக்காளியான அண்ணன்கள், குரூரமாகச் செய்கிற கொலைகளையும் சம்பவங்களாகப் பார்க்க நேரிடுகிறது. சாதியக்கலவரத்தினால், சகமனிதர்களைக் கொல்வவதை இயல்பாகக் கருதுகிற நிலவெளியில் வாழ்ந்தவன், எப்பொழுதும் தனக்குள் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். சாகசமாகக் கருதிய தீரச்செயல்களில் ஈடுபட்ட கதைசொல்லியின் குற்றமனம் அலைக்கழிப்பதுதான் நாவல் முன்வைக்கிற அடைப்படையான விஷயம். சுபிட்ச முருகன் நாவலில் காமத்தினால் சிக்கலுக்குள்ளாகிற கதைசொல்லி பெண்ணுடல் மீதான அதீத ஈடுபாட்டினால், அடித்து நொறுக்கப்படலாம் என்பதை அறிந்தும் தொடர்ந்து அதே செயலைச் செய்கிறான். இப்படியாக நான் என்னால் வேறு என்ன செய்ய முடியும் என்று கதைசொல்லி தன் பக்கத்து நியாயத்தைச் சொல்கிறான். சரவணனின் கதைசொல்லிகள் பொதுவாகத் தவறு எனப் பிரக்ஞையில் உறுத்துகிறபோது,

குழந்தைப் பருவத்தில் கடந்துவந்த ஆச்சி, தாத்தா, அப்பா, அம்மா, அத்தை, மாமா நிரம்பிய கோவில்பட்டி ஊருக்குள் பயணிக்க முயலுகிறன்றனர். குடும்பம் என்ற அமைப்பின் சாதகபாதகமான அம்சங்களின் ஊடாகப் பயணிக்கிற கதைசொல்லி, இயல்பிலே பிறரைக்கொடுமைப்படுத்து கிறகுடும்ப உறவினரையும் “என்ன ஆச்சு?” என்ற ரீதியில் அணுகுகிறார்.

கதைக்கான மொழி என்று செறிந்த நடையில் கட்டமைக்கப்படும் வழமையான நாவல் விவரிப்பு முறைமை குறித்துச் சரவணனின் கதைசொல்லல், பெரிதும் அலட்டிக்கவில்லை. சொற்களைச் செதுக்கி, உருவாக்கப்படும் மொழி குறித்து அக்கறையற்று, தனக்குத் தெரிந்த சம்பவங்கள், பார்த்த மனிதர்கள் என விரிந்திடும் நாவலாக்கத்தில் இலக்கிய அந்தஸ்து என்று சரவணன் மெனக்கெடவில்லை. சரவணன், ஊடக அனுபவங்கள் மூலம் எதிர்கொண்ட யதார்த்த வாழ்க்கையில் நடைபெறும் நம்ப முடியாத சம்பவங்கள், இப்படித்தான் வாழ்க்கை இருக்கின்றன, இதில் எப்படி எழுதினால் என்ன? என்று கதைகளைக் கோர்த்து நாவலாக்கிக் கொண்டிருக்கிறார். நாவல், அளவில் சிறியதெனினும் ஏகப்பட்ட கதாபாத்திரங்களைப் பிரதிக்குள் நுழைத் திருப்பது, சரவணன் சீட்டுகளைக் குலுக்கி விசிறுவதுவது போல இருக்கிறது. ஒரு விஷயம் எனக் கதைக்கத் தொடங்கிடும் சரவணன், மையத்தில் இருந்து விலகி, பிசிறடிக்கிற நிகழ்வுகளையும், கதைமாந்தர்களையும் பிரதிக்குள் நுழைந்திட தாராளமாக அனுமதிக்கிறார். சில சம்பவங்களைக் கதையாடலுடன் இயைபுபடுத்திச் செறிவாகவும், சில சம்பவங்களை நெகிழ்ச்சியாகவும், மேலோட்டமாகவும் எடுத்துரைக்கிற சரவணன், விவரிப்பில் நாவலின் மையத்தைச் சிதலமாக்கியுள்ளார். பின்நவீனத்துவக் கதையாடல் போக்கு, பெரும்பாலும் நாவலாக்கத்தில் பின்பற்றப்பட்டுள்ளது. கதைகளை விவரிக்கிற மொழியில் எளிய தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. நாவலாக்கத்தில் சில இடங்களில் காத்திரமான தத்துவ விசாரணைகள் இடம் பெற்றுள்ளன. சுபிட்ச முருகன் நாவலில் அழுக்கு மூட்டைச் சாமியாரின் கதை பின்புலமாக இருப்பினும், மாய உலகானது விநோமான மொழியில் சொல்லப்பட்டிருக்கிறது. சரவணனைப் பொருத்தவரையில் உன்னதமான நாவல் என்றால் வடிவத்திலும், மொழியிலும் இப்படித்தான் இருக்கும் என்ற மரபான கறார் வரையறைகள் புறந்தள்ளப்பட்டுள்ளன; எப்படி வேண்டுமானாலும் நாவல் முயற்சிகள் இருக்கும் என்று தன்னிச்சையான போக்குத் தொடர்கிறது. கதைமொழியில் இன்னும் செதுக்கி, செம்மையாக்கப்பட்ட பிரதிகளை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை, உன்னதமான பிரதிகளாக என்றும் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் என்று ஆலோசனை சொல்வது சமகாலச் சம்பவங்களை முன்னிறுத்திக் கதைக்கிற சரவணனுக்குப் பொருந்தாது. பொதுவாக நவீனக் கதைமொழி என்பது கடன் அட்டைகள் (Credit Cards) காலத்தில் பெரிதும் மாறியுள்ளது. தாஸ்தாயெவ்ஸ்கி, காப்கா, ஆல்பர்ட், காமு, ஜேம்ஸ் ஜாய்ஸ் எனத் தொடங்கிய நாவலின் கட்டமைப்பை மட்டும் கொண்டாடுகிறவர்கள், ஒரு காலகட்டத்தில் உறைந்திருக்கின்றனர். அவர்கள் ஒருவகையில் மொழி திரைப்படத்தில் நினைவு தடுமாறிய பேராசிரியராக வருகிற நடிகர் பாஸ்கர் போன்றவர்கள். மௌனியின் கதைமொழி போல எதுவுமில்லை என்று சிலாகிக்கிறவர்களை எகிப்திய மம்மியாக்கி விடலாம். நாவலின் மையத்திற்கு விசுவாசமாகக் கதைசொல்கிற ஒற்றையான போக்குக்கு மாற்றாக ஏகப்பட்ட கிளைக்கதைகளுடன் கதை விவரிக்கிறமுறைதான், இன்றைய நவீன நாவலின் போக்காக இருக்கிறது. லஷ்மி சரவணக்குமார், விநாயக முருகன், கரன் கார்க்கி, தமிழ் மகன், தமிழ்ப் பிரபா என விரிந்திடும் அண்மைக்கால

நாவலாசிரியர்களின் படைப்புகள் பெரிதும் மரபார்ந்த கதைசொல்லலுக்கு முக்கியத்துவம் தரவில்லை என்பது கவனத்திற்குரியது. ஐந்து முதலைகள் தொடங்கிச் சரவணன், எந்தவொரு விஷயத்தையும் எப்படி சுவராசியமாகக் கதையாக்குவது என்பதற்கு முன்னுரிமை தரும் நிலையில், நாவலின் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் தரவில்லை. பாத்திரங்களை உளவியல்ரீதியான அணுகுமுறையில் நுட்பமாக விவரிக்கத் தோது இருக்கும்போது, அதிலிருந்து விலகி வெவ்வேறு சம்பவங்களை விவரிப்பது சரவணன் படைத்திருக்கிற நாவல்களின் பொதுப்போக்காக இருக்கிறது. எல்லாம் கேளிக்கையாகவும், வம்பாகவும் மாறிக்கொண்டிருக்கிற காலகட்டத்தில் நாவல் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாது. மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் மரபான வடிவத்திலும், கதை சொல்வதிலும் நவீன நாவல் இடமளிக்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

சரவணனின் முதல் நாவலான ஐந்து முதலைகளின் கதை என்ற தலைப்பு மரபுரீதியில் சொல்லப்பட்டுள்ள கதை என்ற கருத்தை உருவாக்குகிறது. அந்த நாவலின் தொடர்ச்சி அடுத்தடுத்த நாவல்களில் பதிவாகியுள்ளன. பதின் பருவத்தில் தொடங்கி வாலிபனாக வளர்ச்சியடைந்துள்ள ஆண் மனதின் கொண்டாட்டங்கள், சாகசங்கள், வலிகள், அவமானங்கள் என்ற நாவலின் கதையாடல் அடுத்தடுத்துத் தொடர்வது தான் பிரதிகளை வாசிப்பதில் சுவராசியமளிக்கின்றன. ஒருவனின் கதைதான் வெவ்வேறு நாவல்களாக வடிவெடுத்துள்ளன என்று சொல்வதற்கும் பிரதி இடமளிக்கிறது. இன்னும் ஏதோ இருக்கிறது என்று வாசிப்பில் நம்பிக்கையை ஏற்படுத்தி, கதையாடல் ஒருவிதமான வெற்றிடத்தில் முடிகிறது. இதனால் வாசகன் நினைவுகளின் வழியாக நாவலின் கதைக்குள் பயணிக்கத் தொடங்குகிறான். நாவலின் கதை விவரிப்பில், ஒருவிதமாக நிறைவைப் பதிவாக்குகிற வழமைக்கு மாறாகச் சரவணன் எல்லாப் பாத்திரங்களையும் வாசகர்களிடம் விட்டுவிட்டு மௌனமாகி விடுகிறார். இன்னும் ஏதோ இருக்கிறது என்ற நம்புகிற வாசகன் சரவணன் எழுதியிருக்கிற அடுத்த நாவலைத் தேடிப் போக வேண்டியதுதான். சென்னை, கிறித்தவக் கல்லூரியில் மாணவனாகப் பயின்றபோதும், ஹாக்கி விளையாட்டு வீரனாவதற்காக விளையாட்டு விடுதியில் தங்கியிருந்தபோதும், முதலீட்டாளராகத் தைமூர் நாட்டுக்குச் சென்றபோதும் அகரீதியில் குமைகிறான். ஆதியும் அந்தமும் அற்ற பெருவெளியில் தான் என்ற நினைப்பில் மனிதர்கள் செய்கிற அத்துமீறல்களும், கொலைகளும், துரோகங்களும், வன்முறைகளும் நாளும் பெருகிற சூழலில் கதைசொல்லி இயல்பாகக் கடந்து போவது எப்படி சாத்தியம்? சுபிட்ச முருகன் நாவலின் கதைசொல்லிபோல காமத்தைக் கடந்திட உடல் பற்றிய புனைவுகளுக்குள் உழன்று கொண்டிருக்கிற ஆள் என்று தன்னை அடையாளப்படுத்துவது எளிய விஷயம் அல்ல. சரவணன் ஒருநிலையில் பல்வேறு கதைசொல்லிகளுடன் ஒத்திசைந்து தனது நாவல்களை எழுதியுள்ளார். சூழலின் அழுத்தம் காரணமாக முன்னெப்போதையும்விட சிக்கலுக்குள்ளாகியுள்ள நவீன வாழ்க்கையின் நெருக்கடிகளில் இருந்து, தப்பித்து ஓடுகிற மனோபாவம், பெரும்பாலான ஆண்களின் மனங்களில் ததும்புகிறது. வீடு, குடும்பம் என்று காலங்காலமாகக் கட் டமைக்கப்பட்டிருக்கிற இருப்பினைத் துறந்து சித்தார்த்தன், தேசாந்தரியாகி ஞானத்தைத் தேடியது, இன்றளவும் வெவ்வேறு வழிகளில் தொடர்கிறது. சராசரியான வாழ்க்கையைக் கடந்து செல்லும்போது, சிலரின் தேடல் என்பது வழமையில் இருந்து மாறி, வேறுபட்ட தளங்களில் பயணிக்கிறது. எல்லாம் துல்லியமானவை என்ற பிரக்ஞையின் ஆதிக்கம் எங்கும் பரவலாகி, ஒருவகைப்பட்ட தத்துவம் ஆழமாக ஊடுருவி, வலுவாக

இருக்கிற பொதுப்புத்தி கேள்விக்குள்ளாக்கப்படுவது, தற்செயலானது அல்ல. விதிவிலக்கான செயல்பாடு அல்லது மனநிலையுடையவர்கள், புதிய சூழலை உருவாக்கிட முயலுவதும், சூழலுக்குள் முடங்குவதும் என எதிரெதிர் முனைகளில் செயல்படுகின்றனர். நவீன சமூகம் கட்டமைத்துள்ள அரசு, மதம், குடும்பம், சமூகம், அதிகாரம் போன்றவற்றைக் கேள்விக்குள்ளாக்கிடும் இளைய தலைமுறையினர் எப்போதும் புதிய சவால்களை விருப்பத்துடன் எதிர்கொள்கின்றனர். சமூகத்தின் விழுமியங்கள் மீது இடைவிடாத கேள்விகளை எழுப்பப்படும் போது தான் ஒழுங்கற்ற முறையில் கதைகள் சொல்லப்பட்டிருந்தாலும் கேள்விகள் மூலம் பகுப்பாய்வு செய்திட முடியும். சரவணன், ஒவ்வொரு நாவலிலும் தனது அனுபவங்களை மொழியின் வழியாகக் கடத்திடும் பணியை விலாவாரியாகச் செய்கிறார். ஏகப்பட்ட சம்பவங்களையும் மனிதர்களையும் கதைகளின் சரடில் கோர்க்கிற சரவணனனுக்கு எப்படி செய்நேர்த்தியுடன் செயல்பட வேண்டுமென்ற பருண்மையான திட்டம் எதுவுமில்லை. இவை நாவலுக்கான விஷயமாக எங்ஙனம் உருவெடுக்கின்றன என்று வாசிப்பில் யோசிப்பதற்குள் வாழ்க்கை இப்படித்தான் சிலருக்கு லபிக்கிறது, நம்மால் என்ன செய்ய முடியும்? என்ற கேள்வி தோன்றுகிறது. இதுதான் கதையா? என்ற கேள்வியின் வழியாகப் பயணிப்பதற்குள் அடுத்தடுத்து மாறுபட்ட சம்பவங்களைக் கதைக்குள் திணிப்பது சரவணனின் இயல்பாக இருக்கிறது. அஜ்வா நாவல் போதைப் பழக்கம் குறித்த விவரிப்பு என்று நம்புவதற்குள் அப்பா, அம்மா, தாய்மாமன், அத்தை, சுந்தர் அண்ணன், விஜி அண்ணன் என்ற பேச்சுகள். அப்புறம் டெய்சி. வேறுபட்ட போதை முறைகள். இப்படியான கதையாடலில் ஏன் மனிதர்கள் இப்படியெல்லாம் இருக்கின்றனர் என்ற கேள்விதான் மிச்சமாகிறது. போதை சமாசாரத்தில் இன்னும் புகுந்து எழுதுவதற்கான சாத்தியம் நிரம்ப இருக்கிறது என்றாலும், அஜ்வா பேரிட்சை, சொட்டு நீர்ப் பாசனம் எனக் கலந்துகட்டி விரிந்திடும் நாவலில் மையம் சிதலமாகியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் அயல்நாடு முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுப்பதற்காக அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையில் பிரமாண்டமான மாநாடு நடத்தப்பட்டது. அந்த நிகழ்வின்போது ஹாலோகிராமில் உருவாக்கப்பட்ட மின்னணுக் குதிரை, காற்றில் மிதந்துவந்து ஜெயலலிதாவின் முன்னால் மண்டியிட்ட காட்சி, எதனுடைய குறியீடு? உலகமெங்கும் இருந்து அழைக்கப்பட்டிருந்த தொழில் முனைவர்களுக்குச் செலவழிக்கப்பட்ட பல கோடிப் பணம் வீண்விரயம் என்பதைத்தவிர அந்த மாநாட்டினால் பயன் எதுவுமில்லை. வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வெற்றிலை பாக்கு வைத்துத் தொழில் தொடங்க அழைப்பு விடுத்தும் ஏன் பலரும் முன்வரவில்லை. யோசிக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில் சரவணன் சந்திரனின் ஐந்து முதலைகள் நாவல் நினைவுக்கு வருகிறது. காட்சி ஊடகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த சரவணன், திடீரென சர்வதேசப் பின்புலத்தில் உலகமயமாக்கல் அரசியலை நாவலாக எழுதியுள்ளார். ஒவ்வொரு செயலுக்கும் பின்னர் அரசியல் பொதிந்துள்ளதை அவதானிக்கிற சரவணனின் நாவல் முயற்சி, சமூக விமர்சனமாக வெளிப்பட்டுள்ளது. நாவலின் கதைசொல்லி, தமிழகத்திலிருந்து தெற்காசியாவிலுள்ள தைமூர் நாட்டில் தொழில் தொடங்கி, அந்த நாட்டின் வளத்தைச் சுரண்டலாம் என அங்கே செல்கிறார். தைமூர் அடிப்படையில் பொருளாதாரரீதியில் வளமற்ற நாடு. ஆனால் அந்த நாட்டில் இயற்கை வளங்கள் கொட்டிக்கிடக்கின்றன என இரையை விழுங்கிட அலைகிற முதலைகளாக முதலீட்டாளர்கள் குவிகின்றனர். வணிகம் என்ற பெயரில் எவ்விதமான நியாயங்களும் இல்லாமல் கொடூரமான செயல்கள் நிகழ்த்தப்படுகின்றன. துரோகம் என்பது

இயல்பானதாகக் கருதப்படுகிற சூழலில், எப்படியாவது பணத்தைக் கைப்பற்றிட முதலைகள் துடிக்கின்றன. 'மூலதனக் கொடுங்கோன்மை' எனப் பொதுவுடைமை ஆசான் மார்க்ஸ் சொன்னது அப்படியே பொருந்துகிறது. தைமூரில் டாலர் நோட்டுத்தான் செல்லுபடியாகிற பொருளாதாரச் சூழலில், பூர்விக மக்கள் அன்றாட உணவுக்காக எதையும் இழக்கின்றனர். கதைசொல்லி, ஏற்கனவே தைமூரில் செயல்படுகிற தொழில் முனைவர்களுடன் கூட்டுச்சேர்ந்து செய்கிற ஒவ்வொரு முயற்சியிலும் தடங்கல் ஏற்படுகிறது. கடல் அட்டைகள், காஃபி லூவாக், கூட்டு உழவாரன் பறவைக் கூடு எனத் தேடியலைகிற நிலையில், எதையாவது செய்து எப்படியாவது பொருளீட்ட முயலுவதில் நெறிமுறை எதுவும் இல்லை. தொழில் முதலீடு என விரிந்திடும் சாம்ராஜ்யத்தில் சகமனிதர்களுடனான உறவென்பது நம்பிக்கைத் துரோகம், கசப்பு, வஞ்சகம், கொண்டாட்டம், காமம், வெறுப்பு என விரிந்திடும் சூழலில், எங்கும் முதலைகள் வாயைப் பிளக்கின்றன. அவற்றின் வாய்களில் வைரச் சுரங்கங்களும் எண்ணெய்க் கிணறுகளும்.

காதல், குடும்ப உறவு எனக் கதைசொல்கிற வழமையான தமிழிலக்கியக் கதையாடல் சூழலில், சரவணனின் நாவல் களம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, தைமூர் எனப் பரந்திருப்பது வாசிப்பில் சுவராசியமளிக்கிறது. தமிழ்நாட்டில் மணல் மாபியாக்களின் சாம்ராஜ்யம் எப்படி எல்லா மட்டங்களிலும் ஊடுருவியுள்ளது பற்றிய கதைசொல்லல், அண்மைக்காலத் தமிழக அரசியலுடன் நாவலைப் பொருத்துகிறது. பணத்தை எந்த வழியிலும் சம்பாதிக்கத் துடிக்கிற முதலீட்டாளர்கள் பற்றிய சரவணனின் சித்திரிப்புகள், உலகமயமாக்கல் எப்படியெல்லாம் தனது ஆக்டோபஸ் கரங்களை விரித்து எல்லாவற்றையும் விழுங்கிடத் துடிப்பதைச் செறிவுடன் விவரிக்கின்றன. இதுவரை சமூகம் பன்னெடுங்காலமாக உருவாக்கியுள்ள மதிப்பீடுகளின் வீழ்ச்சியை நாவல் நுட்பமாகப் பதிவாக்கியுள்ளது. பணத்தை முன்வைத்த வாழ்க்கையில் துரோகமும் நட்பும் ஒரே வரிசையில் நிற்கின்றன. இங்கு யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் துரோகி அல்லது நண்பனாக மாறுவதற்கான எல்லாவிதமான சாத்தியப்பாடுகளும் இருப்பதை நாவலின் மையம் உணர்த்துகிறது. உலகமயமாக்கல் பண்பாட்டுத் தளத்தில் எத்தகைய மனித மதிப்பீடுகளை உருவாக்கும் என்பதை அறிந்திட ஐந்து முதலைகளின் கதை நாவல் முக்கியமான ஆவணம். எல்லோரும் முதலைகளாக மாறிப் பேராசையில் தவிக்கும்போது, பெரிய முதலைகளின் சர்வதேசக் கொள்ளை வியாபாரம் சூடு பிடிக்கும். உலகமயமாக்கல் என்ற சொல்லுக்குப் பின்னால் அரசியல், கொள்ளை, பண்பாட்டுச் சீரழிவு குறித்த பேச்சுகளை உருவாக்குகிற ஐந்து முதலைகளின் கதை, இது வரை தமிழ்ச் சமுதாயம் காலங்காலமாக உருவாக்கியிருக்கும் மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. கதைசொல்லியின் சொற்களின் வழியாகப் பயணிக்கிற வாசகன், அறம் பற்றி இது வரை படர்ந்துள்ள மூடுதிரையை விலக்கி, தனக்கான அறத்தைக் கண்டறிகிறான்.

இன்றைய காலகட்டத்தில் உண்மைகளைத் தொலைத்துவிட்டு, அது குறித்து அறியாமல் வாழ்கிற நிலை, பலருக்கும் லபித்துள்ளது. நகல்களின் நடுவில் நகல் உண்மையானது, அசலான உண்மையைவிட அசல் தன்மையுடன் இருக்கிறது. இது நகல்களின் காலம். அசலான சுயமான மனிதன் என்று யாரும் இருப்பதற்கான சாத்தியம் எதுவுமில்லை. வரலாறு என்பது அதிகாரத்தினால் கட்டமைக்கப்படுகிற சூழலில் மனிதர்கள் வெறும் உடல்களாக மாற்றப்படுகின்றனர். குழந்தை பிறந்தவுடன் தரப்படுகிற எண்,

வாழ்க்கையின் எல்லா காலகட்டங்களிலும் தொடர்கிறது. தொடர்ந்து எண்களினால் கட்டுப்படுத்தப்படுகிற மனித இருப்பு, மதம் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரத்தின் ஆதிக்கத்தில், எப்பொழுதும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உடல்களாக உருமாறுகின்றன. ஒருவகையில் காயடிக்கப்பட்ட உணர்வுகளுடன் நடமாடும் நடைப்பிணம் என்று சமகால மனிதனைக் குறிப்பிட முடியுமா? உலகமயமாக்கல் காலகட்டத்தில் இளைஞர்கள் மரபான விழுமியங்களைத் தொலைத்துவிட்டு, எதன்மேல் நம்பிக்கை கொள்வது என்ற அவநம்பிக்கையுடன் தத்தளிக்கின்றனர். நகல்களைக் கொண்டாடுகிற சமூகச் சூழலில் எல்லாம் கலங்கலாகவும், குழப்பமானதாகவும் மாறியுள்ள நிலையில், டூப்ளிகேட் இல்லாத அசலான ரோலக்ஸ் வாட்ச் என்று சரவணன் சித்திரிக்கிற முயலுவது ஏற்புடையதா? யோசிக்க வேண்டியுள்ளது. கோவில்பட்டி ஊரிலிருந்து சென்னை மாநகருக்கு வந்தவன் எதிர்கொள்கிற சாதி, மதம், பணம், அந்தஸ்து, அரசியல், கொண்டாட்டம் என விரிந்திடும் நாவல் ஒருவகையில் அதிகாரம் எப்படியெல்லாம் செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்திட முயலுகிறது. கரிசல் பின்புலத்தில் இருந்து வந்த இளைஞன், தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்குவதில் இருந்து அவனுடைய அனுபவங்கள் விரிகின்றன. விளிம்பில் இருந்து வருகிறவன், ஒவ்வொரு கட்டத்திலும் தன்னிருப்பை அடையாளப்படுத்திட வேண்டியுள்ளது; போட்டியான நகர்ப்புற வாழ்க்கையில் பொருளாதாரம் தொடங்கி எல்லாவற்றிலும் எலியோட்டமாக ஓடிட வேண்டிய நெருக்கடி, துரத்துகிறது. உலகமயமாக்கல் காலகட்டத்தில் எல்லாம் சரக்காக மாறியுள்ள சூழலில் கதைசொல்லி, தனது சமூக அடையாளத்தை உயர்த்திக் காட்டிட வேண்டியுள்ளது. பொருளாதாரத்தில் வெற்றியடைந்து, ஏற்கனவே திருமணமான திவ்யாவுடன் பாலுறவை வைத்திருக்கிற கதைசொல்லி, ஒருவிதமான போதாமையினால் தத்தளிக்கிறான். ஏதோவொரு வெறுமை அவனைத் துரத்துகிறது. வெற்றியை அடைந்திட்டதாகக் கருதிய சூழலில், சமூக மதிப்பீடு, குறுக்கிடுகிறது. சந்திரன் எப்பொழுதும் அசலாக இருக்கிறான். கதைசொல்லியின் மனம் எதிலும் திருப்தியடையாமல், தாழ்வு மனப்பாண்மையில் தத்தளிக்கிறது. எது அசல் எது நகல் என்று கண்டறியப்படாத சூழலில் வாழ்ந்திடும் கதைசொல்லிக்கு ரோலக்ஸ் வாட்சில் போலி இல்லை என்பது அதிர்ச்சியாக இருக்கிறது. திடீரெனப் போலி ரோலக்ஸ் வாட்ச், கதைசொல்லிக்குக் குறியீடாக மாறுகிறது.

யதார்த்த வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் சில சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. படைப்பைப் பொருத்தவரையில் சிலவேளைகளில் படைப்பாளியின் விருப்பத்திற்கு எதிராகவும் பாத்திரங்களின் மனவோட்டமும், செயல்பாடும் அமைகின்றன. வாசகருக்கு ஏமாற்றமளிக்கிற நிகழ்வுகள், படைப்பில் இடம் பெறும்போது, அதை ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. சுபிட்ச முருகனில் கதை சொல்லியின் பாலியல் பிறழ்வுச் செய்கை, மூடுண்ட தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாகப் பெண்களிடையில் வெறுப்பை எழுப்புகிறது. உடல் பற்றிய மர்மத்தைத் தொடர்ந்து கட்டமைத்துப் பாலியல் உறவை ரகசியமாகக் கட்டிக்காக்கிற தமிழர் வாழ்க்கையில் சுபிட்ச முருகனைத் தேடிச் செல்கிற கதைசொல்லியின் ஆன்ம அனுபவம் மர்மமானது. அதியற்புதப் புனைவு, இயற்கையிகந்த சம்பவம், பிரபஞ்ச மர்மம், விநோதமான கடவுள், இயற்கையின் பேராற்றல் என்று நாளும் மனித இருப்புக் குறித்து முடிவற்ற கேள்விகளின் ஊடாக வாழ்ந்திடும்போது, சுபிட்ச முருகனை

முன்வைத்துக் கதைசொல்லியின் நீளும் ஆன்மத் தேடல், தவிர்க்கவியலாதது. புலன் கடந்த அப்பாலை குறித்துக் காலங்காலமாக யோகிகள் கண்டறிந்திட முயன்ற முயற்சிகள், இருத்தல் குறித்தும் கேள்விகளை எழுப்புகின்றன. புலன்களைக் கடந்த நிலையில் விநோதமான அனுபவத் தேடல், ஒருநிலையில் கஞ்சா புகைக்குள் இருந்திடவும் சாத்தியமுண்டு. கதை சொல்லிக்குத் தோன்றுகிற தரிசனங்களும், ஆன்ம அனுபவமும் மாயப் பிரமைகளுக்கு அடிமைப்பட்ட மனதின் வெளிப்பாடுகள். மோனாமேனியா (Monamania) என்ற மனநோயினுக்குட்பட்ட அறிகுறிகளைக் கதைசொல்லியிடம் காண முடிகிறது. அறிவார்ந்த அடிப்படை இல்லாத சம்பவங்களை யதார்த்த வாழ்க்கையில் நடந்ததாக விவரிப்பது, ஒருவகையில் மனநோய்க் கூறுதான். கதைசொல்லி, மனதின் சமநிலையை இழந்தநிலையில் முடிவற்ற பிரேமைகள் தோன்றுகின்றன. இளம் வயதில் இருந்து மதம், கடவுள் பெயரால் உருவாக்கப்படுகிற கட்டுக்கதைகள், நம்பிக்கைகளின் இளைஞனின் மனம், அனுபூதி நிலையாக நாவலில் பதிவாகியுள்ளது.அதேவேளையில் கதை சொல்லியை முன்வைத்துப் பதிவாகியுள்ள சம்பவங்களை அபத்தமென்று புறந்தள்ளவும் இடமிருக்கிறது.

போதையின் பல்வேறு அம்சங்களையும் விவரிக்கிறது அஜ்வா நாவல். வெளிமாநிலத் தில் இருந்து தமிழகத்தில் தங்கியிருக்கிற டெய்ஸியின் விடமுடியாத போதைப் பழக்கம் காரணமாகத் தொடர்புடைய கதைசொல்லி, எதிலும் பிடிப்பற்ற மனதுடன் உழல்கிறான். ஒருநிலையில் அடர்த்தியான கஞ்சா புகை, கண்ணிமையின் மீது போதை மருந்தைச் செலுத்துதல் எனத் தன்னிலையை இழக்கிற விஷச்சூழலுக்குள் சிக்கிக்கொண்டால், மரணம் காத்திருக்கிறது. கதைசொல்லிக்கு டெய்ஸியுடனான காதல் என்ன ஆச்சு? அஜ்வா பேரிட்சை குறித்த பதிவு, சொட்டு நீர்ப் பாசனம், பஞ்சாப் விவசாயின் தோட்ட அனுபவம் போன்றவை போதையில் இருந்து தன்னை மீட்க முயலுவதா? போதை என்ற ராட்சதக் கரத்தின் நிழலில் சிக்கியுள்ள கதைசொல்லியின் வாழ்க்கை, புலன் கடந்த அனுபவத்தைத் தர்சிக்க முயலுகிறது. போதையை முன்வைத்துப் பாத்திரங்களை உருவாக்கி, போதையின் மூலம் மனிதர்கள், கண்டறிந்திட முயலுகிற தன்னை மறத்தல் குறித்து விவரிக்காமல், வாசகரின் தேடலை வேறுவகையில் துரிதப்படுத்துகிறது அஜ்வா நாவல். யோசிக்கும்வேளையில் கடவுள், உடலுறவு, மது, கஞ்சா போன்றவற்றின் மூலம் சில கணங்களில் தன்னிருப்பை மறந்து அடைகிற ஆன்மீக நிலையைப் பேரானந்தம் என்று சொல்ல முடியும். சரவணன், போதையை முன்வைத்துச் சம்பவங்களை விவரிப்பதுடன், ஏன் இப்படியெல்லாம் மனிதர்கள் தங்களையே வதைத்துக் கொள்கின்றனர் என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். எல்லாவற்றையும் துறந்து, ஹரித்துவாரில் கங்கை நதிக்கரையில் எரியும் நெருப்பின் சுவாலையில் ஹுக்காவில் கஞ்சா புகைக்கிற ஜடாமுடி ஆசாமிகளின் தேடல், போதை இல்லையா? என்ற கேள்வியை அஜ்வா நாவல் எனக்குள் எழுப்பியது.

கரிசல் நிலப்பரப்பின் வெக்கைக்குள் இருந்து வெளியேறி, ஹாக்கி இந்திய அணியில் விளையாடத் துடிக்கிற இளைஞனின் தேடல்களும் அதற்கான விளைவுகளும் பார்பி நாவலாகியுள்ளது. வளைந்த மட்டைக்கும், பந்துக்கும் இடையில் உருள்கிற காலமும், வெளியும் போல விளையாட்டு வீரனின் வாழ்க்கை இருக்கிறது. விளையாட்டு என்ற ஒற்றைச் சொல்லினுக்குப் பின்னால் இயக்குகிற பிரமாண்டமான உலகினைப் பார்பி பொம்மையை முன்வைத்துக் கதைசொல்லி விவரிக்கிற சம்பவங்கள்தான் நாவலின் மையம். விளியாட்டுத்திடலில் பயிற்சியின்போது,

கை நழுவிப்போன குண்டு உடலில் பட்டதானல் முடமாகி போன இளம் விளையாட்டு வீராங்கனையின் கனவு நாசமாகிப் போனதற்குக் காரணம் கதைசொல்லிதான். வெறுமனே அலங்காரப் பொம்மையாக இருக்கிற பார்பி பொம்மைக்கும் வீராங்கனைக்கும் வேறுபாடு எதுவுமில்லை. கதைசொல்லியிடம் எப்பொழுதும் பத்திரமாக இருகிற பார்பி பொம்மை எதன் குறியீடு? கதைசொல்லியின் குற்றமனம் இடைவிடாமல் அவனைத் துரத்துகிறது. அவளுடன் இயல்பான நட்புடன் இருக்க முயலுவதும் தடைபடுகிறது. எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாடு இருக்கிற உலகில் கதைசொல்லியின் விளையாட்டுக் கனவு போலத்தான் சகலமும் இருக்கின்றன. சரவணனின் பிற நாவல்களுடன் ஒப்பிடும்போது, பார்பி கதையாடல் குறிப்பிட்ட எல்லைக்குள் செறிவான சம்பவங்களுடன் விரிந்துள்ளது.

எது சாதனை? எது அடைய விரும்பிய சிகரம்? எது இலக்கு? என்று சுயமுன்னேற்றக் கோட்பாடுகளில் சிக்கித் தவிக்கிற இளைஞர்கள் இன்று எங்கும் பெருகியுள்ளனர். வாழ்க்கையின் லட்சியம் மருத்துவராதல், ஐஏஎஸ் அதிகாரி ஆவது, பெரிய பணக்காரனாவது என்று திட்டமிட்டுச் செயலாற்றி, அதைக் கைப்பற்றிய பின்னர், என்ன மிஞ்சுகிறது? நுகர்பொருள் பண்பாடு, இயற்கையிலிருந்து மனிதனைப் பிரித்து, ஏதோவொரு பொற்காலக் கனவுடன் வாழ்தல்தான் வாழ்வின் அடையாளம் என்று உருவாக்கியுள்ளது. பெரும்பாலோர், தாங்கள் திட்டமிட்ட இலக்கை அடைவதில்லை. சிலர் அடைந்த இலக்கில் உறைந்திருக்கின்றனர். சிகரத்தை அடைந்திடத் துடியாகத் துடிக்கிறவர்களின் தேடலும் வலியும் தொடர்கின்றன. உண்மையில் சிகரம் எதுவும் இருக்கிறதா? என்ற கேள்விக்குள் சிக்கிக்கொண்டால், லகுடு நாவலின் கதைசொல்லியாகிட நேரிடும். கரிசல் காட்டில் வறுமையான பின்புலத்தில் வாழ்கிற பதின்பருவத்தினான இளைஞன், தனது தந்தையைப்போல தெருவிலும், பேருந்து நிலையத்திலும் லாட்டரி சீட்டுகளைக் கூவி விற்கிறான். ஒரு லாட்டரி சீட்டில் ஒருவனுடைய பொருளாதார வாழ்க்கை, தோசைப் புரட்டாக மாறிடும் சூழலில் அதிர்ஷ்டத்தின் பார்வை அவன்மீது படிந்திருக்கிறது. எது அதிர்ஷ்டம்? தந்தை எப்பொழுதும் போல சீட்டுக்களை விற்றிட, மகன் சுரண்டல் லாட்டரி விற்பனை தொடங்கி, சூதாட்டத்தை முன்வைத்துப் பெரிய வேட்டையைத் தேடுகிறான். அன்றாடம் தொழிலாகச் செய்கிற செயல் என்பது இருப்பிற்கான பணத் தேடல். ஏதாவது செய்து, அது தில்லுமுல்லுவாக இருந்தாலும் சரி, எவ்விதமான ஒழுங்குமற்றுப் பணத்தை அள்ளிக் குவிக்க முயலுவது, தேடலின் ஆதாரம். வேட்டைப் பறவையான லகுடு தொலைவில் இருந்து பெரிய இரைக்காகக் காத்திருந்து, ஒரு நிலையில் லாவகமாகக் கவ்விச் செல்லும் இயல்புடையது. லகுடு போலக் கதைசொல்லியும் எங்கெங்கோ சென்று, காத்திருந்து லம்பாகப் பெரும் தொகையைச் சம்பாதிக்க முயலுகிறான். எல்லாம் எண்கள்தான். சூதின்மூலம் பண வேட்டையில் ஈடுபட்ட கதைசொல்லியை முன்வைத்துச் சொல்லப்பட்டுள்ள கதையாடலில் நடப்பு வாழ்க்கை குறித்துக் கேள்விகள் தோன்றுகின்றன. சரவணனின் பெரும்பாலான கதைசொல்லிகள் எதற்காகவும், எப்படியும் வாழ்ந்திடத் துடிக்கிறவர்கள்; தன்னுடைய நலனுக்காக அத்துமீறல்களை எளிதாகச் செய்கிற இயல்புடையவர்கள். அதேவேளையில் உச்சமான செயல்பாட்டின்போது, அறம் குறித்து யோசிக்கின்றனர். இந்த முரண்தான் கதையாடலில் முக்கியமானது. மனிதன், சிந்திக்கத் தொடங்கியதில் இருந்து தனக்கும் பூமிக்குமான தொடர்பு, பிரபஞ்சத்தின் மாய விநோதங்கள், சமூக நெறிமுறைகள், இயற்கையைப் புரிந்திட முயலுதல் போன்றவறின்மூலம் பொது

விதிகளைக் கண்டறிய முயன்றான். அதன் விளைவாக ஒழுங்கு, அறம் கண்டுபிடிக்கப்பட்டன. அறத்தின் பின்புலத்தில் தனிமனிதன் மற்றும் வாழ்க்கை குறித்த விழுமியங்கள் உருவாக்கப்பட்டன. அந்த விழுமியங்களை மையமாக வைத்துப் புதிய பிரதிகள் உற்பத்தி செய்யப்பட்டன. காலந்தோறும் புதிய தலைமுறைக்கு அந்தப் பிரதிகள் விட்டுச் செல்லப்பட்டன. அதே காலகட்டத்தில் உற்பத்தியான புதிய பிரதிகளும் பண்டைய பிரதிகளில் இருந்த மையத்தை உள்வாங்கிக் கொண்டன. அறம் என்பது வாழ்வின் ஆதாரம் என்பது பொதுப்புத்தியானது. சரவணன் சித்திரிக்கிற கதைசொல்லிகள், அறம் என்ற சொல்லின் மீது ஈர்ப்புடையவர்கள் எனினும் சூழலின் காரணமாக எல்லாவிதமான அத்துமீறல்களிலும் ஈடுபடுகின்றனர். சரவணனின் முதல் நாவலில் தொடங்கிடும் அறம் பற்றிய மதிப்பீடு, பிற நாவல்களிலும் வெவ்வேறு அளவுகளில் தொடர்கிறது. பண்டைத் தமிழ்ப் படைப்புகளில் இடம் பெற்றிருந்த அறம் பற்றிய சிந்தனை, இன்றைய நவீனத் தமிழ் நாவலாக்கத்திலும் தொடர்வது, வரலாற்றின் விநோதம்தான். சரவணன் சித்திரிக்கிற நாவல்களின் கதையாடல், பிரதி என்ற நிலையில் முன்வைக்கிற கருத்துகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை வாசிப்பில் கண்டறிய முடியும். படைப்பாளியின் வேலை என்பது வெறுமனே தகவல்களைத் தெரிவிக்கும் செயல்பாடு மட்டுமல்ல; படைப்பாக்கத்தில் வறட்டுத்தனமான நியதிகளையும், விதிகளையும் பிடித்துக்கொண்டு தொங்குவதில் அர்த்தம் எதுவுமில்லை. நடப்பு வாழ்க்கை குறித்து அக்கறையுள்ள நாவலாசிரியர் பல்வேறு விதிகளுக்கும், அரசியல் நெருக்கடிகளுக்கும் இடையில் அந்தரத்தில் ஊசலாடுகிற மனித இருப்பைக் கதையாடலில் முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளது. இந்தக் காலம் இப்படியாக இருக்கிறது, இங்கே இளைஞர்களின் நிலை ஊசலாட்டமாக இருக்கிறது என்ற நிலையில் தேடலைத் தொடங்க வேண்டியுள்ளது. மக்களை இயற்கையிலிருந்து விலக்கி, அரசியலைக் கையகப்படுத்தியுள்ள கார்ப்பரேட்டுகளின் ஆதிக்கமும், சநாதனவாதிகளின் மத அதிகாரமும் எங்கும் பரவியிருக்கிற இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களின் தேடல் உற்சாகம் இழந்து, வலி நிரம்பியதாக மாறியிருக்கிறது. தமிழகத்தின் இளைய தலைமுறையினரை முன்வைத்துச் சொல்லப்பட்டுள்ள சரவணனின் நாவல்களில் இடம் பெறுள்ள இளைஞர்களின் செயல்பாடுகள், சமகாலத்தின் பதிவுகளாகியுள்ளன. அவை, ஒருவகையில் கொண்டாட்டமும், துயரமும் நிரம்பியவை. வேறு என்ன?

**துணைநூற்பட்டியல்**

1. சரவணன் சந்திரன். (2015). *ஐந்து முதலைகளின் கதை.* சென்னை: உயிர்மை பதிப்பகம்.
2. சரவணன் சந்திரன். (2016). *ரோலக்ஸ்வாட்ச்.* சென்னை, உயிர்மை பதிப்பகம்.
3. சரவணன் சந்திரன். (2016). *அஜ்வா.* சென்னை, உயிர்மைபதிப்பகம்.
4. சரவணன் சந்திரன். (2017). *பார்பி.* சென்னை, கிழக்குபதிப்பகம்.
5. சரவணன் சந்திரன். (2018). சென்னை *டிஸ்கவரி புக்பேலஸ்.*
6. சரவணன் சந்திரன். (2019). *லகுடு.* சென்னை, கிழக்கு பதிப்பகம்.
7. உம்பர்ட்டோஈகோ. (2018). *நான் எப்படி எழுதுகிறேன்.* க. பஞ்சாங்கம் (மொ-பெ). பொள்ளாச்சி. நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம்.